தங்கபஸ்பம்
புகையிலையின்
வேகம்.

வரி விளம்பரங்கள்

சைக்கிளும் உபகரணங்களும்

உறுதியான சைக்கிள்கள், குழந்தைகளுக்குரிய பிராம், டிரை சைக்கிள்கள், நம்பிக்கையுடன் வாங்கும் இடம். இங்கிலீஷ் சைக்கிள் அண்டு மோட்டார் இம்போர்ட்டிங் கம்பெனி லிமிடெட், 4/9, பிராட்வே, மதராஸ்.

அறிவிப்பு

ஆந்திரா மஹிள சபா
மைலாப்பூர், சென்னை-4.

கர்னாடக சங்கீதத்தில் டிப்ளமோ கோர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது, வீணை மற்றும் வாய்ப்பாட்டு.

பிற்பகலில்: ஸ்திரிகளுக்கு ஹிந்தியும், நீடில் ஒர்க் வகுப்புகள் அடையார், ஆந்திரா மஹிள சபா நர்ஸிங் ஹோமில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டைப்ரைட்டிங் மற்றும் நீடில் ஒர்க் வகுப்புகள் லஸ் சர்ஜ் கட்டிடத்தில் கோடை காலத்தில் தொடர்ந்து நடைபெறும். பிராஸ்பெக்டஸுக்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஹோட்டல்

சாஸ்திரிஸ் ஹோட்டல், சிக்பெட், பெங்களூர் சிடி. நவீன வசதிகளுடன் செளகரியம் வாய்ந்த அறைகள் கூடிய ஹோட்டல். மிகச் சிறந்த உணவு வகையராக்களும் மிகப் பரிவான ஊழியர்களும்.

தேவை

ஏஜெண்டுகள் தேவை. அனைவருக்கும் நல்ல வருமானம். மாதிரிக்கு விண்ணப்பிக்கவும். ஆங்கிலத்தில் மட்டும் எழுதவும். India Button Co., Bara Bazar, Calcutta-7.

எங்கள் அழகான தோல் சூட்கேஸ், ஹோல்டால்கள், செருப்புகள், பூட்ஸுகள் சான்டல்கள் இவைகளை ஒவ்வொரு நகரத்திலும் டவுனிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் மாதச்சம்பளம் ரூ. 250-ல் தேவை. நிபந்தனைகளுக்கும் மாதிரிகளுக்கும் எழுதவும்: United Leather Company, P. O. Kuthar (Simla Hills)

கோயமுத்தூர், சேலம், நீலகிரி, மதுரை, ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி இவைகளுக்கு கோயமுத்தூர் மற்றும் மதுரையைத் தலைநகராகக்கொண்டு பிரசிடென்ஸி லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்கு ஆர்கனைசிங் செகரெடரி தேவை. வசீகர நிபந்தனைகள்: விவரங்களுக்கு விண்ணப்பிக்க: பிராஞ்சு மானேஜர், தி பிரசிடென்ஸி லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிட்., திருவனந்தபுரம்-1

வியாபாரம்

ரைஸ் மில்காரர்களே! உணவுக் கண்ட்ரோல் ஒழிந்தது. மின்சார வெட்டு பூரணமாக நீங்கிவிட்டது. நெல் அவிப்பதற்கான அண்டாக்கள் தேவையா? 6' x 3' x 3', 6' x 4' x 4', 8' x 4' x 4' முதலியன சைஸ்களில் ¼", ⅝", ⅜" பிளேட்டுகளில் தொட்டிகள் தயாராகின்றன. மிக உறுதி. விலை சரசம். தவிர கோடவுனுக்கு வேண்டிய இரும்பு ட்ரஸ்களும் இரும்புக் கதவுகளும். ஆர்ட்டருக்கு செய்து கொடுக்கிறோம். அக்ரோ இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங் கம்பெனி, தபால் பெட்டி நெ. 2, உடுமலைப்பேட்டை. Gram: NATIONAL — Phone: 44

ஈகிள், ஏர்கிங் சாக்பீஸ் 34 வருட காலமாக பிரசித்தி பெற்றவை. ஸ்டாக்கிஸ்டுகள் தேவை. விலைகள் மிகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. குருநாதன் சாக் ஒர்க்ஸ், கும்பகோணம்.

புத்தகம்

ஹிந்தி நோட்ஸ்:-பிராதமிக் ரூ.1/- மத்யமா ரூ. 2/8 ராஷ்ட்ர பாஷா ரூ. 3. பிரவேசிகா ரூ. 5-14 ஹிந்தி கலா மந்திரம், 82, போஸ் ரோட், மதராஸ்-1.

பத்திரிகை

''பொன் மொழி'' தமிழ் மாதவெளியீடு, அரக்கோணம். 15-5-54-ல் 2-வது இதழாக வெளிவருகிறது. முன்பணம் கட்டும் ஏஜெண்டுகள் தேவை. பிரதி வேண்டுவோர் நான்கு அணா தபால் தலை அனுப்பவும். ஆசிரியர்: எஸ். ஜி. சிவப்பிரகாசம்.

விற்பனை

மேற்கு மாம்பலத்தில் 9 கிரவுண்டு மனையும் இரண்டு சிறு வீடுகளும் விற்பனை. விலையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்: K. M. தேசாய், கோவிந்த் பாலஸ், 73, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை 2.

ஏல விற்பனை

தஞ்சாவூர் டவுனில் 6-ம் நெம்பர் வார்டில் T. S. No.922A-I. உள்ள ராம்னட் ஹௌஸ் என வழங்கும் பங்களா-டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பங்களாவுக்கு பக்கத்தில்-ஷை பங்களாவும் மனையும் அவுட் ஹவுஸ்களுடனும் விஸ்தார காம்பவுண்டுடனும் அதே இடத்தில் 22-5-1954 சனிக்கிழமை மாலை 4-30மணிக்கு O. P. No. 192/1947-ல் ஏற்பட்ட ஹைகோர்ட் உத்திரவுப்படி ஏலம் விடப்படும். ரைட் அண்டு கம்பெனி, ஹைகோர்ட் & கவர்ன்மெண்ட் ஆக்ஷனர்ஸ், நெ 2/3, லக்மதாஸ் தெரு, பி. டி., மதராஸ்.

இந்திய ரெயில்வே ஆக்ட் IX of 1890 செக்ஷன் 55 & 56 படி, பாத்தியதையில்லாத சாமான்கள், சதரன் ரெயில்வே, மதராஸ் சால்ட் கோடார்ஸ் L.P.O. ஆபிஸில் 2-6-54 முதல் தினம் காலை 10-30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். மர்ரேஸ், சென்னை-1



தினமணி
சென்னை 1954ஞு மே மீ 15உ சனிக்கிழமை
வெளியூர் 1954ஞு மே மீ 16உ ஞாயிற்றுக்கிழமை

காஷ்மீர் உத்தரவு

இந்தியாவுக்கும், காஷ்மீருக்குமிடையே அரசியல் உறவுகள் பற்றி காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை செய்துள்ள தீர்மானங்களை உடனடியாக அமல் நடத்துவதற்கு ராஷ்டிரபதி உத்தரவு பிறப்பித்து விட்டார். சட்ட பூர்வமான வார்த்தைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால், சில விஷயங்களைத் தவிர காஷ்மீர், இந்தியாவிலுள்ள இதர ராஜ்யங்களைப் போல், இந்தியாவின் ஒரு அங்கமாகிறது என்று தான் அர்த்தம். காஷ்மீரின் விசேஷ நிலைமையை முன்னிட்டுச் சில விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. காஷ்மீர் அடியோடு இந்தியாவோடு சேர்ந்து விட்டால், நிரந்தரமான காஷ்மீர் வாசிகளின் நலன்கள் பாதிக்கப்படலாம் என்ற ஒரு பயம் இருந்தது. இந்த பயத்திற்கு நியாய மில்லாம லிருக்கலாம். ஆயினும், கொஞ்சமும் அத்தகைய பயங்களுக்கு இடமளிக்கக் கூடா தென்பதற்காகவே இந்த சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஸ்தாவர சொத்துகளை வாங்கும் உரிமை, காஷ்மீரில் குடியேறுவது, ராஜ்ய சர்க்கார் உத்யோகங்கள் ஆகிய விஷயங்களில் காஷ்மீரிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கு காஷ்மீர் சட்ட சபை சட்டமியற்றலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுடன் இணைந்த மற்ற சமஸ்தானங்களுக்கு இல்லாத சலுகைகள் காஷ்மீருக்கு மட்டும் ஏன் கொடுக்கப்பட வேண்டும் என்று சிலர் கோணல் கட்சி பேசலாம். காஷ்மீரின் இணைப்பு பற்றிய சம்பவங்களை ஞாபகப் படுத்திக் கொண்டால் இந்த கேள்விகளுக்கு இடமிராது. இந்த விவகாரம் ஐ. நா. ஸ்தாபனம் வரையில் போய் இன்னம் முடிவடையாமல் இருக்கிறது. இந்த நிலைமையில் இந்தியா பலவந்தமாக காஷ்மீர் மீது ஒரு அரசியல் ஏற்பாட்டைத் திணிக்கிறது என்ற பழிச் சொல்லுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதே இந்திய சர்க்காரின் விருப்பம். அதனால்தான் காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை செய்துள்ள தீர்மானங்களை மட்டும் அமல் நடத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஜீவாதார உரிமைகள் விஷயத்தில் யுக்தமான கட்டுப்பாடுகளை விதித்து சட்டமியற்றிக் கொள்ளவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா ராஜ்யங்களுக்குமே இந்த அதிகாரம் இருக்கிறது. பேச்சுரிமை, எழுத்துரிமை என்பவை தேசத்தின் பந்தோபஸ்திற்கு உட்பட்டவை தான். அதைப் பாதுகாப்பதற்கு வேண்டிய கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ராஜ்யங்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்பதை மறுக்க முடியாது. 'நியாயமான கட்டுப்பாடுகள்' விதிப்பது ஜீவாதார உரிமைகளுக்கு முரணானதல்ல வென்பதை சுப்ரீம் கோர்ட்டே ஒப்புக் கொண்டிருக்கிறது.

இதர ராஜ்யங்களிலிருப்பது போல், காஷ்மீருக்கும் சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, மற்ற பிரதேசங்களில் அமலிலிருக்கும் எல்லா ஏற்பாடுகளும் காஷ்மீருக்கும் இனி பொருந்தும்.

1952-ல் செய்யப்பட்ட டில்லி ஒப்பந்தத்தை ஷேக் அப்துல் அமுல் நடத்த ஒப்புக் கொண்டிருந்தால் இந்த ஏற்பாடுகள் முன்பே வந்திருக்கும். ஆனால், வேறு நோக்கத்துடன் அவர் அந்த ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வராமல் காலம் கடத்திக் கொண்டிருந்தாரென்பது பின்னர் நடந்த சம்பவங்களிலிருந்து புலனாயிற்று. காலம் தாழ்த்தாவது காஷ்மீர்-இந்தியா உறவுகள் சட்ட பூர்வமான முறையில் ஸ்திரமாக்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய விஷயம். தங்கள் அபிலாஷைகள் நிறைவேறுவதற்கு உதவி செய்த பக்ஷி குலாம் முகம்மதுக்கு காஷ்மீர் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ராஷ்டிரபதியின் இந்த உத்தரவை காஷ்மீர் தலைவர்கள் மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறார்கள். பற்பல ராஜ்யங்கள் கொண்ட இந்தியக் குடும்பத்தில் புதிதாகச் சேர்ந்துள்ள காஷ்மீரை வாழ்த்துகிறோம்.

சக்தியா, சிவனா?

சிவன் பெரிதா, சக்தி பெரிதா என்று தேவலோகத்திலேயே தகராறுகள் ஏற்படுவதுண்டு என்று கதைகளில் படித்திருக்கிறோம். தேவர்களுக்கே சந்தேகம் ஏற்படும்போது யார் உயர்ந்தவர் என்ற சண்டை கேவலம் நரர்களிடமும் ஏற்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. ராஜாங்க சபை பெரிதா, மக்கள் சபை பெரிதா என்ற தகராறு இது வரையில் பல சந்தர்ப்பங்களில் எழுந்திருக்கிறது. சில சமயம் பகிரங்கமாக மோதல் ஏற்படும்; சில சமயம் முணுமுணுப்புகள் இருக்கும். ஆனால், 'யார் ஒசத்தி' என்ற போட்டி இருந்து கொண்டே தானிருக்கிறது. விசேஷ விவாக மசோதா விஷயத்தில் ராஜாங்க சபை விளையாட்டுப் பிள்ளைகள் மாதிரி நடந்து கொண்டிருக்கிறதென்று மக்கள் சபை மெம்பர் ஸ்ரீ. சாட்டர்ஜி செய்த ஒரு பிரசங்கம், ராஜாங்க சபையின் கௌரவத்தை பாதித்து விட்டதென்று இப்போது புகார் கிளம்பியிருக்கிறது. ஆனால், ஸ்ரீ. சாட்டர்ஜி இதை ஒப்புக் கொள்ளவில்லை. பிரிட்டனில் லார்டுகள் சபையைப் பற்றி, மாஜி பிரதமமந்திரி ஸ்ரீ. லாயட் ஜார்ஜ் இன்னம் மோசமாகப் பேசியிருக்கிறார் என்றும், அங்கே ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா என்றும் ஸ்ரீ. சாட்டர்ஜி கேட்கிறார். இருசபைகளிலும் வாதப் பிரதிவாதங்கள் கடுமையாக நடக்கின்றன. இதென்ன, அர்த்தமில்லாமல் சண்டை போடுகிறார்களேயென்று பிரதம மந்திரி ஸ்ரீ. நேரு விழிக்கிறார். இதை எப்படித் தீர்ப்பது? சக்தி சிவன் போட்டியில் கிடைத்த முடிவே இதற்கும் பொருந்துமென்று தோன்றுகிறது. சக்தியும், சிவனும் ஒன்றுதான். யார் பெரியவர் என்ற பேச்சே கிடையாது என்று அந்தச் சண்டை தீர்ந்தது. அதைப் போல் மக்கள் சபை, ராஜாங்க சபை இரண்டும் சேர்ந்தது தான் பார்லிமெண்ட். இரண்டுக்கும் போட்டியில்லை. யார் உயர்ந்தவர் என்ற பிரச்னையும் இல்லை என்பதுதான் உண்மையான நிலைமை. சட்ட மந்திரி ஸ்ரீ. பிஸ்வாஸ் விவகாரத்தில், பிரதம மந்திரியே இதைத் தெளிவாக்கியிருக்கிறார். ஆனால், தங்கள் கௌரவத்தைப் பற்றி இரு சபையினரும் அடிக்கடி ஏச்சுக்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் ஜனங்களிடையே இந்த சபைகளின் கௌரவம் பாதிக்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறோம்.

மூலிகைத் தோட்டம் பெரிதாக்கப் படுகிறது

அசெம்பிளியில் சுகாதார மந்திரி பதில்

தோட்டத்தை மாற்றியதற்கு விளக்கம்

சென்னை, மே. 15—இந்தியன் வைத்திய கல்லூரிக்கான மூலிகை தோட்டத்தைக் கீழ்ப்பாக்கத்திலிருந்து அரும்பாக்கத்திற்கு மாற்றியது பற்றி அரை மணி நேர விவாதம் அசெம்பிளியில் இன்று பிற்பகல் நடைபெற்றது.

ஸ்ரீ. டி. சி. நாராயண நம்பியார் பேசுகையில், இடத்தை மாற்றியதால் மூலிகை மூலம் மாணவர்களுக்கு போதிக்கும் நோக்கம் பாதிக்கப்படுகிறதென்றார்.

இப்போது சபையில் கோரமில்லை என்றார் சபாநாயகர்.

விவாதத்தைப் பின்னர் வைத்துக் வைத்துக் கொள்ளலாமா என்றார் ஒரு மெம்பர்.

''அப்படி முடியாது. விவாதத்தின்போது போதிய அளவுக்கு மெம்பர்களை வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றார் சபாநாயகர்.

பின்னர் மணி அடிக்கப்பட்டது. மெம்பர்கள் சிலர் சபைக்கு வந்தனர். ஸ்ரீ. நம்பியார் தொடர்ந்து பேசினார். ஆயுர் வேதத்திற்கு சர்க்கார் ஆதரவு கொடுக்குமென்பதைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டார்.

ஸ்ரீ. எம். பழனியாண்டி பேசுகையில், மூலிகைகளை ஆதரிக்க வேண்டுமென்றார்.

இந்நிலையில் சபாநாயகர் மீண்டும் ''கோரம்'' இல்லாவிடில் ''அகோரமாகி''ப் போய்விடுகிறது என்றும், விரைவில் மெம்பர் முடித்து விட்டால் மந்திரி பேசலாமென்றும் கூறினார்.

சுகாதார மந்திரி பதிலளிக்கையில், நிலை பற்றித் தப்பான அபிப்பிராயமேற்படுத்தும் நோக்குடன் சிலர் கூறுவதைக் கேட்டு மெம்பர் பிரச்னையைக்கிளப்பியிருக்கிறாரென்றும்' சிறிய இடத்தில் மூலிகைத் தோட்டம் கல்லூரிக்குள் இருந்ததென்றும், பெரிய இடம் தேவையென்று பக்கத்தில் கிடைத்ததால் 14 ஏக்கரா நிலப்பரப்பில் 100 வித மூலிகைகள் அரும்பாக்கத்தில் வளர்க்கப்படுகிறதென்றும், கல்லூரிக்கு அது ஒரு மைல் தூரத்திலிருக்கிறதென்றும் கூறினார். மூலிகை வளர்ப்பு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய மூடப்படவில்லை என்றார்.

இந்நிலையில் திங்கட்கிழமை காலை 8 மணிக்குக் கூடுவதென சபை கலைந்தது.

திருமணம்

திரிபுரசுந்தரி—சுப்ரமணியம்

சென்னை, மே. 15—சென்னை டெபுடி வர்த்தக வரி அதிகாரி ஸ்ரீ. சி.வி. ராமச்சந்திர ஐயரின் புத்திரி செள. திரிபுரசுந்தரிக்கும் ரங்கூன் சார்ட்டர்டு பாங்க் ஸ்ரீ. டி.எஸ். ராமசுவாமி ஐயரின் புத்திரன் ஸ்ரீ. ஆர். சுப்ரமணியனுக்கும் (சென்னை சார்ட்டர்டு பாங்கு) நேற்று பார்க் டவுனிலுள்ள எஸ். கே.பி.டி. சத்திரத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பந்துமித்திரர்களும்பிரமுகர்களும் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்து பரிசுகள் வழங்கினர்.

'விளையாட்டுப் பிள்ளை' விவகாரம்

ஸ்ரீ. சாட்டர்ஜி விளக்கம் சமர்ப்பணம்

கூட்டுக் கமிட்டி பைசல் வரை உரிமை பிரேரணை ஒத்திவைப்பு

புதுடில்லி, மே. 15—பார்லிமெண்டின் ஒரு சபையின் உரிமையை மற்றொரு சபையின் மெம்பர் பங்கப்படுத்தும் விவகாரங்கள் சம்பந்தமாக இரு சபைகளின் உரிமைகள் பாதுகாப்பு கமிட்டிகளும்ஒன்று கூடி, ஒரு பொது நடைமுறையை வகுப்ப தென்கிற மக்கள் சபை சபாநாயகர் யோசனையை ஏற்றுக் கொள்வதாக ராஜாங்க சபையில் அதன் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

ஸ்ரீ. என்.சி. சாட்டர்ஜி ராஜாங்க சபையை விளையாட்டுப் பிள்ளைகள் கோஷ்டி என அழைத்தது சம்பந்தமாக ஸ்ரீ. பி.எஸ். ராஜகோபால நாயுடு கொணர்ந்துள்ள உரிமைப் பிரேரணையை இரு கமிட்டிகளின் முடிவு தெரியும் வரையில் பைசல் செய்யாமல் வைத்திருப்பதாகத் தலைவர் அறிவித்தார்.

விளக்க வுரை

ஹைதராபாத்தில் தாம் செய்த பிரசங்கத்தைக் குறித்து ஸ்ரீ. என். சி. சாட்டர்ஜி அனுப்பியிருந்த அறிக்கையை ராஜாங்க சபைக் காரியதரிசி வாசித்தார். மக்கள் சபை சபாநாயகர் இவ்விளக்கவுரையை ராஜாங்கசபைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். ஸ்ரீ. சாட்டர்ஜி தம் அறிக்கையில் பார்லிமெண்டின் மதிப்பைக் குறைக்கும் எண்ணம் கிடையாதென்றும், விவாகரத்து போன்ற தீவிர மாறுதல்கள் கொண்ட மசோதாவைக் கொண்டுவர மக்களிடம் ஆக்ஞை பெற வேண்டுமென்றே தாம் வற்புறுத்தியதாகவும் சொல்லியிருக்கிறார். ''விளையாட்டுப் பிள்ளைகள் கோஷ்டி' என்கிற சொற்றொடர் அதன் சம்பந்தப்பட்ட வாக்கியங்களிலிருந்தும், சமய சந்தர்ப்பங்களிலிருந்தும் பிரிக்கப்பட்டுள்ளதென்றார். ''ராஜாங்க சபை மேல் சபை என்கிற வகையில் பெரிய ராஜதந்திரிகளின் சபையாகும். அவர்கள் மறு பரிசீலனை சபையாக இயங்க வேண்டும்'' என்று தான் சொல்லியிருந்ததாகச் சொன்னார். ''பெரியவர்களின் சபையென்று கருதப்படும் மேல் சபையைச் சேர்ந்த சில ஆர்வமிக்க புரட்சிகரவாதிகள் ஏதோ பள்ளிக்கூடச் சிறுவர்கள் கோஷ்டி அல்லது விளையாட்டுப் பிள்ளைகள் போல பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது போலத் தோன்றுகிறது. மேல் சபையின் மறு பரிசீலனைக் கடமையைச் சில மெம்பர்கள் மறந்து விட்டார்கள் போலிருக்கிற தென்றும் சொன்னேன். பரஸ்பர சம்மதத்தின் பேரில் விவாகரத்து பெறுவது போன்ற தீவிர மாறுதல்களைச் செய்த மெம்பர்களைப் பற்றி மட்டுமே நான் பேசினேன். ராஜாங்க சபையை அவமதிப்பாகவோ அல்லது அவதூறாகவோ பேசவில்லை என்பது விளங்கும். நான் சபை பூராவையும் கண்டிக்கவில்லை. ஒரு சில மெம்பர்களையே கண்டித்தேன்' என்றார்.

அசெம்பிளியில் முதன் முறையாக கேள்விகளுக்கு ஸ்ரீ காமராஜ் பதில்

லால்குடி விவசாயிகள் தகராறு பற்றி கவனிப்பதாகக் கூறினார்

சென்னை, மே. 15—லால்குடியில் விவசாயிகள், நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவது பற்றி இன்று அசெம்பிளியில் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு முதன் மந்திரி ஸ்ரீ கே. காமராஜும், ரெவின்யூ மந்திரி ஸ்ரீ எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கரும் பதிலளித்தனர்.

நிலைமைபற்றி அத்தொகுதி எம். எல். ஏ. யான ஸ்ரீ ராஜா சிதம்பரம் ரெட்டியார் தமக்கு 'பிரைவேட்' கடிதம் எழுதி இருப்பதாகவும் அவர் கூறியவற்றை கவனித்து நிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தாம் அவருக்கு பதிலளித்திருப்பதாகவும் முதன் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் பதிலளித்தார்.

ஸ்ரீ. காமராஜ் அசெம்பிளியில் முதன் முறையாக இன்று சில கேள்விகளுக்கு பதிலளித்தார்.

திருச்சி ஜில்லா லால்குடி தாலூகாவில் குத்தகைக்காரர்கள் ஏராளமான பேர் வெளியேற்றப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா என்றும் ஸ்ரீ ராஜா சிதம்பரத்திடமிருந்தும் இது பற்றி சர்க்காருக்கு ஏதாவது மகஜர் வந்திருக்கிறதா என்றும் ஸ்ரீ எம். கல்யாணம் கேட்டதற்கும் இல்லையென்று ரெவின்யூ மந்திரி பதிலளித்தார்.

சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறதென்று கேட்டதற்கு திருச்சி கலெக்டரிடமிருந்து அவசரமாக யாதாஸ்தை இது பற்றி சர்க்கார் கேட்டிருக்கிறதென்றும், அது வந்தவுடன் தக்க நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கு மென்றும் மந்திரி பதிலளித்தார்.

ஸ்ரீ ராஜா சிதம்பரம் முதன் மந்திரிக்கு தகவலை அனுப்பி இருக்கிறாரென்றும், மந்திரி இல்லையென்பது சரியா என்றும் ஸ்ரீ கல்யாணசுந்தரம் கேட்டார்.

முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ்: கனம் மெம்பர் ஸ்ரீ ராஜா சிதம்பரம் எனக்கு பிரைவேட் கடிதம் எழுதினார். அதற்கு நான் பதில் எழுதி இருக்கிறேன்'' என்றார்.

சொந்த முறையில் என்றால் என்ன என்பது பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஸ்ரீ காமராஜ் மீண்டும் பதிலளிக்கையில், ''கனம் மெம்பர் எனக்கு சொந்த முறையில் தகராறுகளைத் தீர்த்து வைக்க நீங்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று எழுதினார். நான் பதில் எழுதி இருக்கிறேன்'' என்றார்.

என்ன நடவடிக்கை கடிதம்பற்றி எடுக்கப்பட்டிருக்கிறது? சொந்த கடிதம் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? என்றதற்கு ''நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் எழுதவில்லை. விஷயத்தை கவனிக்கிறோம். என்றுதான் எழுதி இருக்கிறேன்'' என்றார்.

மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், நிலைமையை கவனித்து, தக்க நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கும் என்றார்.

தனிப்பட்டு எழுதப்படும் கடிதங்கள் டெமி அபிஷியல்'' கடிதமாக கருதப்பட்டு கவனிக்கப்படும் என்றார் மந்திரி.

கம்யூனிஸ்ட்களும் திராவிடக் கழகத்தாரும் விவசாயிகளுக்காக நடப்பதாக மந்திரி சொல்வதன் அர்த்தம் சர்க்கார் நிலச்சுவான்தார்களை பாதுகாக்கத்தான் இருக்கிறது என்பதா என்று ஸ்ரீ எஸ். ராமலிங்கம் கேட்டார்.

எல்லோரையும் பாதுகாக்க சர்க்கார் இருக்கிறதென்றும், உதாரணமாக மெம்பர் தாக்கப்பட்டாலும் அவரை சர்க்கார் பாதுகாக்குமென்றும் மந்திரி கூறினார்.

குத்தகைக்காரர்கள் நிலங்களிலிருந்துஅப்புறப்படுத்துவது பெருகி வருவதால் அதைத் தடுக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப் படுமென்று ஸ்ரீ ப. ஜீவானந்தம் கேட்டார்.

பரிசீலனைக்குப் பின்னர் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அதற்கு முன்பல்ல என்றும் மந்திரி பதிலளித்தார்.

கடிதம் எப்படி எழுதப்பட்டிருந்தபோதிலும் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படுமென பதில் எழுதப்பட்டிருக்கிற தென்றும், டாக்டர் மேனன் கேள்விக்கு பதிலளிக்கையில் நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மிராசுதார்கள் மறுப்பு

மணக்கால், மே. 14—லால்குடி தாலூகாவில் உள்ள சில கிராமங்களில் மிராசுதார்கள் விவசாயிகளை மொத்தமாக வெளியேற்றுகிறார்கள் என்று மே.11ந்தேதி அசெம்பிளியில் ஒத்தி வைப்புப் பிரேரணை கொண்டு வந்தது பற்றி மணக்கால் கிராமத்தைச் சேர்ந்த மூன்று மிராசுதார்கள் நிலைமையை விளக்கி ரெவின்யூ மந்திரிக்கு தந்தி அனுப்பியுள்ளனர். இதன் விவரம் பற்றி மிராசுதார்கள் சார்பில் ஸ்ரீ. இராமசுப்பிரமணியம் எழுதுவதாவது: ''விவசாயிகள் சங்கங்களை அமைத்துக் கொண்டு அதற்கான விதிமுறைகளையும் அவர்களே அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை சமூக பகிஷ்காரத்தின் மூலம் அமல் நடத்துகிறார்கள். அவர்களுடைய சொந்த நிபந்தனைகளின் பேரிலில்லாமல் நிலத்தைச் சாகுபடி செய்ய மறுக்கின்றனர். தனிப்பட்ட முறையில் விவசாயிகளுடன் நிலச் சொந்தக்காரர்கள் தகராறுகள் தீர்த்துக் கொள்வது தடுக்கப்படுகிறது. விவசாயிகள் நிலச் சொந்தக்காரர்களைப் பகிஷ்கரிப்பதுடன் தாங்களாகவே பயிரிடும் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு தொழிலாளர்கள் உதவுவதைத் தடுக்கிறார்கள். ஆக மொத்தத்தில் கஷ்டப்படுத்தப்படுபவர்கள் மிராசுதார்களே. விவசாயிகள் கஷ்டப்படுவதே இல்லை; வெளியேற்றப்படுவதாகக் கூறுவது வெறும் கட்டுக்கதை. சுயேச்சையான விசாரணையை உடனே நடத்தும்படிக் கேட்டுக் கொள்கிறோம்''

மில் தொழிலாளருக்கு அரிவாள் வெட்டு

பொள்ளாச்சி, மே. 14—சென்ற ஞாயிறு மாலை பாக்ய லட்சுமி மில் முன் புறத்தில் ஷெடி மில்லில் வேலை செய்யும் கிருஷ்ணன் செல்லமுத்து என்பவர்களை சுப்பே கவுண்டன் என்பவரால் அரிவாளால் வெட்டி காயப்படுத்தியதாகவும் ஷெடிசச்சரவு வேலை விஷயமாக எழுந்ததாகவும், காயம்பட்ட நபர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிரியைப் போலீஸார் ரிமாண்டில் வைத்துள்ளதாக தெரிகிறது. உள்ளூர் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் இன்றைய உஷ்ணம்

நுங்கம்பாக்கம்	94·1
மீனம்பாக்கம்	98 7

விடுபட்ட பிரெஞ்சு பகுதிகள்

சென்னை ராஜ்யத்துடன் இணைப்பு கோரவில்லை என மந்திரி தகவல்

சென்னை, மே. 15—பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் பிரெஞ்சிந்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பிரதேசங்களை சென்னை ராஜ்யத்துடன் இணைக்க சென்னை ராஜ்யத்திற்கு கோரிக்கை வந்திருக்கிறதா என்று ஸ்ரீ.எம். கல்யாண சுந்தரம் கேட்டதற்கு, 'இல்லை' என்று சர்க்கார் கட்சித் தலைவரான மந்திரி ஸ்ரீ.சி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பிரெஞ்சிந்தியா ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த பிரதேச மக்கள் மின்சார, உணவு, கிரோசின் சப்ளை உதவி கோரியிருக்கின்றனரா என்றும், இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கேட்டதற்கு, அது பற்றித் தகவல் தம்மிடமில்லை என்றும் இணைப்பு விஷயமே பிரச்னையாக முதலில் கேட்கப்பட்டதென்றும் கூறினார் மந்திரி.

விடுவிக்கப்பட்ட பகுதியில் அராஜக நிலையோ, ஸ்திரமற்ற நிர்வாகமோ இருந்தால் அது இந்திய எல்லைப் பகுதி நிலைமையை பாதிக்கும் என்பதைக் கவனித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க இந்திய சர்க்காரை ராஜ்ய சர்க்கார் வற்புறுத்துமா என்று ஒரு மெம்பர் கேட்டார்.

மந்திரி: அரசாங்கம்அவசியமான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறதென்று உறுதியாகக் கூறுகிறேன்.

தம் தொகுதி பக்கத்தில் இருப்பதால் சட்டம், அமைதியைப் பாதுகாக்கப் போதிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று ஸ்ரீ.வி.ஆர். நாகராஜன் (விழுப்புரம்) கேட்டார்.

மந்திரி: போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து இந்தியப் பிரஜைகளை பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ளவர்களுக்கு அத்யாவசிய தேவைகள் சப்ளை செய்து உதவுவது பற்றி கேட்டதற்கு இது பற்றி தனிக் கேள்வி கேட்கும்படி மந்திரி கூறினார்.

நிலைமையை சர்க்கார் ஜரூராக கவனித்து வருகிறதென்றும் அவசியமான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்குமென்றும் மந்திரி கூறினார்.

இந்த விவகாரம் பற்றி அரை மணி நேர விவாதம் தேவையென்று கோரப்பட்டது. இதை சபாநாயகர் அனுமதித்தார்.

பாரிஸில் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகிறதென்றும்இப்போது விவாதிப்பது சரியல்ல என்றும் மந்திரி தெரிவித்தார்.

அனுமதிக்கப்பட்ட விவாதம் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வந்துள்ள கோரிக்கை பற்றித் தானே என்று மந்திரி கேட்டதற்கு 'ஆம்' என்றார் சபாநாயகர்.

மலையாளத்தில் குருடாக்கும் கண் நோய்

நூதனமான தல்லவாம்

சென்னை, மே. 15—மலையாளத்தில் சிரக்கல் தாலூகா இருக்கூர் பிர்க்காவில் கொள்ளை நோயாக நூதனமான கண் நோய் ஏற்பட்டிருப்பது பற்றி அசெம்பிளியில் இன்று அவசர கேள்வி கேட்கப்பட்டது.

இம்மாதிரி நோய் ஏற்பட்டிருப்பது உண்மையென்றும், சுகாதார இலாகா தாக்கீதின் கீழ் பிரதேச உணவு சத்து சுகாதார அதிகாரி ஸ்தலத்திற்கு விஜயம் செய்து பரிசோதனை நடத்தினாரென்றும், உணவு சத்து குறைவால் இது ஏற்படவில்லை யென்று அவர் தெரிவித்துள்ளாரென்றும், ஸ்தலத்தில் தண்ணீரில் குறைபாடு இருப்பதாக கூறப்படுகிற தென்றும் மந்திரி தெரிவித்தார். ஒரு அனுபவம் வாய்ந்த கண்டாக்டரை அனுப்பும்படி ஜில்லா வைத்திய அதிகாரிக்கு சுகாதார இலாகா டைரக்டர் தாக்கீது அனுப்பி இருக்கிறாரென்றும் மந்திரி தெரிவித்தார்.

இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து தாக்கீதோ, ஆலோசனையோ எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை யென்றார் மந்திரி.

இந்த நோய் நூதனமானதல்லவென்றும், இதற்கு 'டிரிகோமா' என்று பெயர் என்றும் மந்திரி மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

குடிசைத் தொழில்களுக்கு ஆலோசனை போர்டுகள்

சிவகாசி, சாத்தூரில் தீக்குச்சி தொழிற்சாலைகள் தூத்துக்குடி, திருநெல்வேலியில் பனைவெல்ல தொழில், திண்டுக்கல்லில் தோல் பதனிடு தொழில் முதலியனவற்றிற்கு பிரதேச ஆலோசனை போர்டுகள் நிறுவப்பட்டிருக்கின்றன என்று இன்று அசெம்பிளியில் குடிசைத் தொழில்களுக்கு பிரதேச ஆலோசனை போர்டுகள நிறுவப்பட்டிருக்கின்றனவா என்று கேட்கப்பட்டதற்கு பதிலளிக்கையில் தொழில் மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் தெரிவித்தார்.

தாய், சேய் விடுதிகள் ஏற்படுத்துவது

கிராமப் பகுதிகளுக்கு தாய், சேய் விடுதிகள் நிறுவ இந்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு உதவும் திட்டம் இருக்கிறதென்றும், அதன் படி 35 கிராம ஆஸ்பத்திரிகள் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் இது இந்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு, அவர்களின் மேற்கொண்ட பதில் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் இன்று அசெம்பிளியில் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சுகாதார மந்திரி ஸ்ரீ. ஏ. பி. ஷெட்டி தெரிவித்தார்.

புதிய பஞ்சாயத்துகள் நிறுவும் வேலை ஆரம்பம்

பஞ்சாயத்துகள் இல்லாத இடங்களில் புது பஞ்சாயத்துகளை நிறுவும் வேலை ஆரம்பமாகி இருக்கிறதென்று இன்று அசெம்பிளியில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ எஸ். எஸ். ராமசாமி படையாச்சி தெரிவித்தார்.

சிங் செளவின் பொன் மொழிகள்


CHING CHOW
THIS INSIGNIFICANT ONE WILL UNHESITATINGLY PROCLAIM - POVERTY IS A BURDEN WHICH IS BORNE BY MANY - SUCCESS IS A BURDEN YOU MUST BEAR ALONE -
SUBMITTED BY MRS. S. MORANTZ, PHILA. PA.
—STANLEY LINK
Reg. U. S. Pat. Off. Copr. 1954 by News Syndicate Co. Inc.
2-19

வறுமைச் சுமையைப் பலர் தாங்குவர் ஆனால் வெற்றியின் பாரத்தை நீரேதான் தாங்க வேண்டும்.

திரை உலகம்
(நாளை வெளிவரும்)

துருக்கி ஜனாதிபதி

ஜனநாயக கட்சி தலைவர் தேர்வு

அங்காரா, மே. 14—துருக்கி ஜனாதிபதியாக ஜனநாயக கட்சியின் தலைவர் ஸ்ரீ. ஸெலால் பாயார் இன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மின்சார நிலைய ஆர்ஜித மசோதா

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கொடுக்க வேண்டுமென்று தாம் கூறவில்லை என்றும், நஷ்ட ஈட்டை கடனாகவைத்துக்கொண்டு வட்டியை தரலாமென்று யோசனை கூறுவதாகவும் கூறினார் ஸ்ரீ. கல்யாணசுந்தரம். நிதி நிலைமை சாதகமாக மாறும் வரை ஸ்தல ஸ்தாபனங்களிடமுள்ள ஸ்தாபனங்களை அவற்றிடமே விட்டு வைக்கலாமென்றும் கூறினார். மின்சார இலாகாவில் திடீரென்று ஆட்குறைப்பு நடப்பதைக் குறிப்பிட்டு நியாயமான சம்பளமும், வேலை உத்தரவாதமும் இருக்க வேண்டுமென்றார்.

மராமத்து மந்திரி பதில்

மராமத்து மந்திரி பதிலளிக்கையில் 1949ல் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கவே இம் மசோதா என்றும் அப்போது எல்லா விஷயங்களும் நன்கு கவனிக்கப்பட்டே முடிவுகள் செய்யப்பட்டதென்றும் ஆகவே, இதனை பரிசீலனைக் கமிட்டிக்கு விடுவதை தாம் ஆதரிக்க முடியாதென்றும் கூறினார்.

''ஹைகோர்ட் தீர்ப்பில் காட்டிய பாரபட்ச வித்தியாசக்குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. தேசிய மயமாக்குவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. மெதுவாகப் போகவே விரும்புகின்றனர். கோர்ட்டுகள் எடுத்துக் காட்டிய குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு சட்ட குறைபாடு இல்லை என்று எங்கள் சட்ட ஆலோசகர்கள் கூறி இருக்கின்றனர். குறிப்பாக ஏதாவது குறை இருப்பதாக சுட்டிக் காட்டினால் அதைக் கவனிப்போம்.

தனிப்பட்ட கம்பெனியாருக்கு, நிலை தெளிவாக இல்லாமலிருக்கும் போது உற்சாக மிருக்காது என்று கூறப்பட்டது உண்மையே.

எல்லா ஸ்தாபனங்களையும் உடனடியாக எடுத்து கொள்வது சர்க்கார் உத்தேசமல்ல. நன்கு திறம்பட நடந்து சேவை செய்யும்ஸ்தாபனங்கள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. திறமையற்ற ஸ்தாபனங்களே எடுத்துக் கொள்ளப்படும்.

நன்கு நடக்கும் ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு சர்க்கார் எடுத்துக் கொள்ளப் போகும் காலத்தை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும். கையாளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பூர்த்தி செய்யப் போதிய அவகாசம் தரப்படும். மானேஜிங் ஏஜன்ஸி ஷரத்து பற்றி நன்கு பரிசீலிக்கப்பட்டது. அதில் குறைபாடில்லை என்றே கூறப்படுகிறது. கம்பெனி சிப்பந்திகள் விஷயத்தில் கஷ்டம் எதுவும் இருக்காது எல்லோரும் எடுத்துக் கொள்ளப்படுவர்.

கிராமங்களுக்கு நன்மை

சர்க்கார் லாபத்தை கருதி நடக்கவில்லை. ஆனால், நஷ்டப்பட்டு விடக் கூடாது. ஸ்தல ஸ்தாபன கம்பெனிகளை சர்க்கார் எடுத்துக் கொண்டு லாபமடைந்தால் அது கிராம நலனுக்காகத்தான்போகும். இதைக் கவனிக்கக் கோருகிறேன் சர்க்காருக்கு லாபமென்றால் அது யாருக்குப் போகிறது? நிர்வாகம் சரியாக இல்லை என்றால் அதுவேறு விஷயம். ஆனால் லாபமென்பதற்காக தேசிய மயக் கொள்கையை ஆட்சேபிக்க முடியாது. நிர்வாகம் பற்றி கூறப்பட்ட குறைபாடுகளை கவனிக்கிறேன். அதற்காக ஸ்தாபனங்களைச் சர்க்கார் எடுத்துக் கொள்வதைஆட்சேபிக்கமுடியாது. மசோதாவை பொறுக்கு கமிட்டிக்கு விடவேண்டியதற்கு காரணங்கள் இருப்பது காட்டப்படவில்லை. தாராள நஷ்ட ஈட்டிற்கு வழி வகை செய்திருக்கிறோம். அதிக நஷ்ட ஈடுபெற இதரர் கோரலாம். இதற்கு யாருக்கும் உரிமையுண்டு.

குறைந்த கட்டணத்துக்கு முயற்சி

மின்சார சப்ளையை குறைவான கட்டணத்தில் கிடைக்கச் செய்ய என்னாலான முயற்சிகளைச் செய்வேன். மூன்று மாத டெபாசிட் கேட்பதைக் குறைக்கவேண்டுமென இலாகாவிடம் வற்புறுத்தி வருகிறேன். நிர்வாகத்தைச் சரிப்படுத்தும் விஷயங்களை கவனித்து மக்களுக்கு திருப்தி ஏற்படச் செய்ய முயற்சிக்கப்படும். மின்சார உற்பத்தித் திட்டங்கள் எல்லாம் கையாளப்பட்டு ஒரே 'கிர்டில்' ராஜ்ய முழுவதும் கொண்டு வரப்படும். மின்சார போர்டு நிறுவுவதும் கவனிக்கப்படும்.

மசோதாவை கமிட்டிக்கு விட வேண்டுமென்ற திருத்தத்தைவ வாபஸ் பெறக் கோரினார்.

திருத்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

பின்னர் மசோதா ஷரத்துவாரியாக கவனிக்கப்பட்டது.

ஷரத்து 3,4 விவாதமின்றி நிறைவேறின.

லைசென்ஸ்தாருக்கு நஷ்ட ஈடு தருவது பற்றிய 5-வது ஷரத்துக்கு சில திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டன.

ஸ்ரீ டி. கே. ராஜா தம் திருத்தம் மீது பேசுகையில் நஷ்ட ஈடு நியாயமானதாக இருக்க வேண்டு மென்றும், நியாயமானதா என்பதைக் கோர்ட் கவனித்தாலும் சரியாக இருக்கும் வகையில் இருக்க வேண்டுமென்றும், பழைய குறைபாடு இன்னும் தொடர்ந்து மசோதாவிலிருக்கிறதென்றும் இதைத் திருத்த வேண்டுமென்றும் கூறினார்.

நகரசபைகளுக்கு நிரந்தர ஏற்பாடு தேவை

ஸ்ரீ டி. கே. ராமா பேசுகையில், நஷ்ட ஈடு ஒரே விதமாக மொத்தமாக இல்லாமல் சர்க்காரிடம் லைசென்ஸ்தார்கள் எல்லா விஷயங்களையும் சொன்னால் இரு சாராரும் ஒத்துக்கொண்டுவிட்டுப்போன தொகையைச் சேர்க்க வசதி இருக்க வேண்டுமென்றார். மொத்தம் ரூ. 45 லட்சம் வருமானமுள்ள நகர சபைகளின் வருமானத்தில் ரூ. 5 லட்சம் குறைந்து விட்டால் அதை எப்படி சமாளிக்க முடியு மென்றும், சுங்க வரி நஷ்ட ஈடு தருவது போல் இவ் விஷயத்திலும் நகர சபைகளுக்கு நிரந்தரமான நஷ்ட ஈடோ, மான்யமோ தரக் கோருவது நியாயமானதென்றும் கூறினார். அதை சர்க்கார் ஏற்காமல் போகுமானகையால், இதர தொகைகளையும் நஷ்ட ஈடு தருவதில் சேர்க்க கோருவதாகக் கூறினார்.

மந்திரி பதிலளிக்கையில் மொத்த லாப அடிப்படையில் நஷ்டஈடு தருவது நியாயமானதென்பதை தனிப்பட்ட லைசென்ஸ்தார்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அதை இப்போது மாற்றி அதிகரிக்க காரணமில்லையென்றும் கூறினார். ஸ்ரீ ராமாவின் திருத்தத்தையும் இதர திருத்தங்களையும் தாம் எதிர்ப்பதாகக் கூறினார்.

இரு திருத்தங்கள் வாபஸ் பெறப்பட்டன. வோட்டுக்கு விடப்பட்டு ஷரத்து 5ஐ திருத்தமின்றி சபை ஏற்றது.

6லிருந்து 10 வரை ஷரத்துகள் நிறைவேறின. 11-வது ஷரத்து சர்க்காரின் சிறிய திருத்தங்களுடன் ஏற்கப்பட்டன. இதர ஷரத்துகள் ஏற்கப்பட்டது. ஷெட்யூல்களும் விவாதமின்றி நிறைவேறின.

ஷரத்து 15 விவாதிக்கப்பட்டபோது கம்பெனி தொழிலாளர்கள் எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்வதை சாத்தியமான அளவுக்கு கவனித்துச் செய்வதாக மந்திரி உறுதி அளித்தார்.

மசோதா சட்டமாகியது

மசோதாவை சட்டமாக்க வேண்டுமென மந்திரி பிரேரித்தார். சிறிது விவாதத்துடன் இது நிறைவேறியது.

லைசென்ஸ்தார்களின் கம்பெனிகள் எடுத்துக் கொள்ளப்படும்வரை அவர்கள் விஸ்தரிப்பு வேலையைச் செய்ய இந்திய சர்க்காரிடம் உதவி பெற்றுப் பண உதவி அளிக்கப்படுமென்று மந்திரி உறுதியளித்தார்.

பிரெஞ்சிந்தியா: டில்லி சமிக்ஞை

(முதல் பக்கத் தொர்ச்சி)

சமாதானத்திற்கான பேரார்வத்தால் உந்தப்பட்டு உலக ராஜதந்திரிகள் ஜினீவாவில் கூடியிருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. கருத்து வேற்றுமைகளும் பரஸ்பரம் குறை கூறலும் அதிகமாக இருந்தாலுங்கூட பிரச்னைகளை அணுகும் விதத்தில் பொதுவான அம்சங்கள் நிறைய இருக்கின்றன. ஜினீவாவில் ராஜதந்திரிகளின் முயற்சிகள் வெற்றிகரமாக இருக்குமென நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

சமயம் வந்தால் உதவிக்கு வருவோம்

ஜினீவா பேச்சுகளை இந்தியா அக்கறையுடன் கவனித்து வருகிறது. நாங்களாகவே இவ் விவகாரத்தில் பிரவேசிக்கவிரும்பவில்லை ஆனால் சமயம் வந்தால் பிரச்னை பைசலாவதற்கு ஏதாவது எங்களால் ஒத்தாசையாக இருக்குமென்று தெரிந்தால் மிகவும் ஜாக்ரதையுடன் இதைப்பற்றி ஆலோசிப்போம். அப்படி பிரச்னைக்கு பைசல் ஏற்பட்டு விட்டாலும் ஒப்பந்தத்தை அமல் நடத்துவதும் ரொம்பசிரமமானது. இவ் விஷயத்தில் ஐ. நா. அக்கறை கொள்ள வேண்டும் பிரச்னைபைசலாவதற்கு ஐ. நா. தனது ஆதரவைத் தெரிவித்து ஒப்பந்தம் சரிவர அமல் நடத்தப்படுகிறதா என்று பார்க்கவேண்டும்இந்தியா இவ்வாறு யோசனை கூறியது. ஐ. நா. மெம்பர்களாகிய நாம் எல்லோரும் இவ் விஷயத்தில் நமது பொறுப்பைச் செய்ய வேண்டும்.

கோவாவின் கனவு!

கோவாபற்றி குறிப்பிட்டு நேரு கூறியதாவது:—

பம்பாய்த் தீவை வரதட்சணையாகக் கொடுக்கும்போது இருந்த காலநிலையில் தான் போர்ச்சுகல் சர்க்கார் இன்னும் இருந்து வருகிறது. பிரிட்டிஷ்-போர்ச்சுகீஸிய ஒப்பந்தத்திற்கும் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்திற்கும் கோவாவுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் சேர்ந்த சில நாடுகளே இக் கருத்தைத் தெரிவித்துள்ளன. எந்த நிலைமையிலும் இந்தியா சம்பந்தப்படாத ஒப்பந்தத்திற்கு இந்தியாவை கட்டுப்படுத்த முடியாது சம்பந்தப்பட்ட சிலசர்க்கார்களுக்கு நாங்கள் தகவல் தெரிவித்து போர்ச்சுகீஸிய பிரதமர் ஸலாஜார் வெளியிட்ட அறிக்கையை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். போர்ச்சுகீஸிய பிரதம மந்திரி சொன்னதை சரியான நிலை என்று நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் கூறியிருக்கிறோம்

(வட அட்லாண்டிக் ஒப்பந்தம் கோவாவுக்கும் பொருந்தும் என்றும் பழைய ஒப்பந்தப்படி கோவாவுக்கு பிரிட்டன் உதவு மென்றும் அப்படி போர்ச்சுகீஸியர் கோவாவைவிட்டு போவதானால் சுடுகாடாக்கிவிட்டுத்தான்போவார்கள் என்றும் போர்ச்சுகீஸிய பிரதமர் ஸலாஜார் தமது அறிக்கையில் கூறியிருந்தது ஞாபகமிருக்கலாம்.)

இலங்கை இந்தியர் பிரச்னை

இலங்கை-இந்தியாஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து விசேஷமாக ஒன்றும் நடைபெறவில்லை என்றும் தற்போதைய செளஜன்யமான சூழ்நிலை பாதகமடையும்படி தான் எதுவும் சொல்லவிரும்பவில்லை என்றும் நேரு கூறினார்.

விசேஷமாக ஒன்றும் நடைபெறாவிட்டாலும் கூட இலங்கையிலுள்ள பெருவாரியான இந்தியர் தங்கள் வருங் காலம் குறித்து வெகுவாக பயப்படும் வகையில் பல சிறு விஷயங்கள் நடந்துள்ளன. இலங்கை இந்தியர் விஷயம் கூட ஒரு அளவு ஒரு பிரச்னையாக போய் விட்டதற்குக் காரணம் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறார்கள் என்பதே. உண்மையான பிரச்னை நாடற்றவர் என்று சொல்லப்படும் இந்தியர் பிரச்னையே. இவ்விதம் பெரிய பயத்தை உண்டு பண்ணியுள்ள இலங்கை சம்பவங்களின் போக்கு குறித்து எனது வருத்தத்தை தெரிவிப்பதைத் தவிர வேறு அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இலங்கையில் இருப்பது 6, அல்லது 7 லட்சம் இந்தியர். இவர்கள் தொகை கொஞ்சம் அதிகம் தான். இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்ப்பது இலங்கைக்கும் நல்லது. இலங்கை இந்தியருக்கும் நல்லது. இல்லாவிடில் துரதிருஷ்ட வசமாக பூசல் உணர்ச்சி இருந்து வருவதில் யாருக்கும் பிரயோஜனமில்லை.

எந்தப் பிரச்னையையும் அணுகும் விதத்தில் இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் உள்ள வித்யாசத்தை நேரு குறிப்பிட்டு கூட்டுசமாதானம் தான் கூட்டு பந்தோபஸ்து என்றும் இந்தியா இதற்காகவே, உழைக்க முயற்சிக்கிற தென்றும் கூறினார்.